உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 31.08.2026 • மலர் 04 • இதழ்: 243 • திங்கள் • Edition : Nagercoil • 31.08.2026 • Vol : 04 • Issue : 243 • Page : 4 • Rs. 5/-

# நீண்டகால அடிப்படையில் இந்தியாவுக்கு யுரேனியம்

## உஸ்பெகிஸ்தானுடன் ஒப்பந்தம் கையெழுத்து



தாஷ்கண்ட்: நீண்டகால அடிப்படையில் இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க உஸ்பெகிஸ்தானுடன் முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும், பிரதமர் மோடிக்கு உஸ்பெகிஸ்தான்நாட்டின்உயரிய விருதான 'ஒலி டரஜாலி டஸ்ட்லிக்' விருது வழங்கப்பட்டது.

பிரதமர்நரேந்திரமோடி இரண்டு நாள் அரசு முறை பயணமாக நேற்று உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கண்டுக்கு சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உஸ்பெகிஸ்தான் விமான நிலையத்தில் இருந்து பிரதமர் மோடியும், உஸ்பெகிஸ்தான் அதிபர் மிர்சியோயேவும் அதிபர் மாளிகைக்கு ஒரே காரில் பயணம் செய்தனர்.

தொடர்ந்து பிரதமர் மோடிக்கு தாஷ்கண்டில் உள்ள ஒரு ஓட்டலில் இந்திய வம்சாவளியினர் உற்சாகமான வரவேற்பு அளித்தனர். பின்னர் பிரதமர் மோடி யாங்கி உஸ்பெகிஸ்தான் பூங்காவிற்குச் சென்று அங்கு அமைந்துள்ள சுதந்திர நினைவுச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர், அதிபர் மாளிகையில் இரவு விருந்துடன் கூடிய சந்திப்பு நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து, (ஞாயிற்றுக்கிழமை) காலை உஸ்பெகிஸ்தான் யோகா கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யோகா நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பார்வையிட்டு யோகா குழுவினருடன் கலந்துரையாடினார்.

பின்னர் இன்று மதியம் பிரதமர் மோடியும், உஸ்பெகிஸ்தான்அதிபர்மிர்சியோயேவும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். அந்தப் பேச்சுவார்த்தையில், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை மேம்படுத்துவது, பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அப்போது வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, கலாச்சாரம், உயர் கல்வி, அறிவியல் ஆராய்ச்சி, ஆயுர்வேதம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அகழ்வாராய்ச்சி, சுற்றுலா, கனிம வளம், புவியியல் ஆராய்ச்சி தொடர்பாக இரு நாடுகள் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக நீண்டகால அடிப்படையில் இந்தியாவுக்கு யுரேனியம் வழங்க உஸ்பெகிஸ்தானுடன் முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதிகாரப்பூர்வ சந்திப்புக்குப் பிறகு பிரதமர் மோடியும் உஸ்பெகிஸ்தான் அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவும் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது பிரதமர் நரேந்திர மோடி கூறியதாவது:

இந்தியா, உஸ்பெகிஸ்தான் இடையிலான ராஜ்ஜிய ரீதியிலான உறவு 15 ஆண்டுகளைக் கடந்துள்ளது. இந்த நேரத்தில் இரு நாடுகள் இடையிலான உறவை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல முடிவு செய்யப்பட்டு உள்ளது. கடந்த சனிக்கிழமை இரவு உஸ்பெகிஸ்தான் அதிபர் சிறப்பு விருந்து அளித்தார். அப்போது அவருடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தினேன்.

இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், செயலாளர்கள் அடிக்கடி சந்தித்துப் பேச முடிவு செய்யப்பட்டு உள்ளது. மேலும் இரு நாடுகளின் தொழிலதிபர்கள் இணைந்து சிறப்பு உச்சி மாநாட்டை நடத்தவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. நீண்டகால அடிப்படையில் இந்தியாவுக்கு யுரேனியத்தை வழங்க உஸ்பெகிஸ்தான் முன்வந்திருக்கிறது. இதற்கு தேவையான கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.

வரும் 2030ம் ஆண்டில் இரு நாடுகள் இடையிலான வர்த்தகம் 5 பில்லியன் டாலரை எட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் உள்கட்டமைப்பு, அரியவகை கனிமங்கள், மரபுசாரா எரிசக்தி, விண்வெளி, அணுசக்தி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படும்.

வரும் 2047ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயித்து உள்ளோம். இதேபோல உஸ்பெகிஸ்தானும் வளர்ச்சி அடைந்த நாடாக உருவெடுக்க இலக்கு நிர்ணயித்து இருக்கிறது. இந்த லட்சியத்தை எட்ட இரு நாடுகளும் பரஸ்பரம் இணைந்து செயல்படும். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த உஸ்பெகிஸ்தான் கடந்த 1991ம் ஆண்டு தனி நாடாக உதயமானது. அந்த நாட்டில் இயற்கை எரிவாயு, யுரேனியம், தங்கம் உள்ளிட்ட இயற்கை வளங்கள் நிறைந்துள்ளன.

இந்தியாவில் இருந்து உஸ்பெகிஸ்தானுக்கு மருந்துகள் மற்றும் தொழில் துறைக்கு தேவையான இயந்திரங்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அந்த நாட்டில் இருந்து உரங்கள், பழங்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. கல்வி, தகவல் தொழில் துட்ப துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல் படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து பிரதமர் மோடிக்கு உஸ்பெகிஸ்தான் நாட்டின் உயரிய விருதான 'ஒலி டரஜாலி டஸ்ட்லிக்' 'Oliy Darajali Do'stlik' விருது வழங்கப்பட்டது. பிரதமர் உஸ்பெகிஸ்தானுக்கு சென்றது இது 4வது முறையாகும். இந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு அவர் கிர்கிஸ்தான் நாட்டுக்குச் செல்கிறார்.

## முதல்வர் வருகையையொட்டி முன்னேற்பாடு பணிகள் தீவிரம்: மேட்டூர் அணையில் நீர்வளத்துறை செயலாளர் ஆய்வு

மேட்டூர்: மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு முதல்வர் தண்ணீர் திறந்து வைக்கவுள்ள நிலையில், முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இதனிடையே, அணையில்நீர்வளத்துறை செயலாளர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு முதல்வர் விஜய் நாளை (1ம் தேதி) தண்ணீர் திறந்து வைக்கவுள்ளார். இதனிடையே, அணை திறப்புக்கு ஓரிரு நாட்களே உள்ள நிலையில் முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்புப் பணிகளில் தீவிரமாக நடந்து வருகிறது. அணையில் துப்பாக்கி ஏந்திய போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் சேலம் வருகிறார். பின்னர், சாலை மார்கமாக மேட்டூர் அணைக்கு வருகிறார். தொடர்ந்து, அணையிலிருந்து பாசனத்துக்கு முதல்வர் தண்ணீர் திறந்து வைக்கிறார். அணையில் நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் மேடை அமைக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி, முதல்வர் விஜய் வரும் வழிகளில் மக்கள் அதிகளவில் கூடுவார்கள் என்பதால், மக்கள் அதிகம் கூடும் இடங்கள், முக்கிய சந்திப்புகள், மேட்டூர் நகரப்பகுதிகளில் இரும்பு தடுப்பு கம்பிகள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.

குறிப்பாக, அணையின் வலது கரையில் அமைந்துள்ள பவளவிழா கோபுரம் நுழைவு வாயில் பகுதியில் இருந்து அணை பூங்கா, ஒர்க்ஷாப், கோட்டாசியர் அலுவலகம், 3 ரோடு வழியாக 4 வரை இரும்பு தடுப்பு கம்பிகள் அமைக்கும் பணி இன்று நடந்தன.

தொடர்ந்து, கட்சி சார்பில் முதல்வருக்கு மாவட்ட நிர்வாகிகள் பல்வேறு இடங்களில் வரவேற்பு அளிக்க திட்டமிட்டுள்ளனர். மேலும், முதல்வர் வருகையின் காரணமாக, போக்குவரத்து மாற்றங்கள், வாகன நிறுத்தும் இடங்கள், காவல் கட்டுபாட்டு மையம் உள்ளிட்ட பணிகளை போலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். முதல்வர் வருகையின் காரணமாக, ஏடிஜிபி தலைமையில் ஐஜி, டிஐஜி, எஸ்பிக்கள் உள்பட 3,000 போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

நீர்வளத்துறை செயலாளர் ஆய்வு

தமிழக முதல்வர் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வருவதை முன்னிட்டு, நீர்வளத்துறை செயலாளர் பிரசாந்த் எம்.வடநேரே நிகழ்ச்சி நடக்கும் இடம், தண்ணீர் திறக்கும் இடம் ஆகியவற்றை இன்று மாலை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, பணிகளை விரைந்து முடிக்கவும் அறிவுறுத்தினார். பின்னர், முதல்வர் ஆய்வு மேற்கொள்ளும் இடங்களை பார்வையிட்டார்.

மேலும் அணைக்கான நீர்வரத்து, நீர் இருப்பு, வெளியேற்றம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், திருச்சி மண்டல தலைமை பொறியாளர் ஜெயக்குமாரி, நீர்வளத் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.

## மாயமான இந்தியர்களை மீட்க தீவிர முயற்சி: நேபாளத்துக்கான இந்திய தூதர் தகவல்



புதுடெல்லி: நேபாளத்தில் மாயமான இந்தியர்களை கண்டுபிடிக்கவும் அவர்களை பத்திரமாக மீட்டு வரவும் நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நேபாளத்துக்கான இந்திய தூதர் நவீன் ஸ்ரீவஸ்தவா தெரிவித்தார்.

நேபாளத்தில் திபெத் எல்லையையொட்டி உள்ள பல மாவட்டங்களை கடந்த புதன்கிழமை பெருவெள்ளம் தாக்கியது. இதில், இந்தியர்கள் உள்பட ஏராளமான வெளிநாட்டினர் மாயமாகினர். 300க்கும் மேற்பட்ட இந்தியர்கள் மாயமானதாக முதற்கட்ட தகவல்கள் வெளியான நிலையில், 288 பேர் மாயமானதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் நேற்று முன் தினம் அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.

மேலும், வெள்ளம் பாதித்த பகுதியில் சிக்கி தவித்த 21 இந்தியர்கள் மீட்கப்பட்டதாகவும் மத்திய அரசு தெரிவித்தது. தமிழ்நாட்டை சேர்ந்த அந்த 21 பேரும் நேற்று டெல்லி வந்தடைந்தனர். இதனிடையே, திரிசூலி 1 மின் திட்டத்தில் பணியாற்றி வந்தபோது வெள்ளத்தில் சிக்கிய 63 இந்தியர்கள் மீட்கப்பட்டனர். இதன் மூலம் மீட்கப்பட்ட இந்தியர்களின் எண்ணிக்கை 84 ஆக உயர்ந்தது.

இந் நிலையில், நேபாளத்தில் மாயமான இந்தியர்களைகண்டுபிடிக்கவும் அவர்களை பத்திரமாக மீட்டு வரவும் நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நேபாளத்துக்கான இந்திய தூதர் நவீன் ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில், "காணாமல் போன சுற்றுலாப் பயணிகளைக் கண்டறிய இந்திய தூதரகம் நேபாள ராணுவம் மற்றும் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து தீவிரமாக செயல்பட்டு வருகிறது. நேபாள ராணுவத்துடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம். காணாமல் போன இந்தியர்களைப் பற்றி எங்களிடம் உள்ள தகவல்களை அவர்களுடன் பகிர்ந்து வருகிறோம்" என தெரிவித்தார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
"வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக"
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தினதமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்ற வழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்.
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200, 70102 64701



## "சமூக நீதித் தலைவர்களின் பெயர்களை அரசு திட்டமிட்டு நீக்கவில்லை"

### அமைச்சர் ராஜ்மோகன் விளக்கம்




பெரம்பலூர்: "இடஒதுக்கீடு மானிய கோரிக்கையில் சமூக நீதித் தலைவர்களின் பெயர்களை திட்டமிட்டு நீக்கவில்லை. பெரியார், அம்பேத்கரை நாங்கள் கொள்கைத் தலைவர்களாக கொண்டிருக்கிறோம். அவர்களின் பெயர்கள்விரைவில் இடஒதுக்கீடு மானிய கோரிக்கையில் சேர்க்கப்படும்" என்று பள்ளி கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

பெரம்பலூரில் பல்வேறு துறைகளின் கீழ் கட்டப்பட்ட புதிய கட்டிடங்கள் மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில்நடந்தது. இதில் தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் கலந்து கொண்டு, தாட்கோ, பள்ளிக்கல்வித் துறை, கூட்டுறவுத்துறை உள்பட பல்வேறு துறைகளின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள ரூ.4.48 கோடி மதிப்பிலான 13 கட்டிடங்களைமக்களின்பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். மேலும், 161 பயனாளிகளுக்கு ரூ.1.42 கோடி மதிப்பிலான நலத் திட்டங்களை அமைச்சர் வழங்கினார்.

இதை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் ராஜ்மோகன் கூறுகையில், "இடஒதுக்கீடு மானிய கோரிக்கையில் சமூக நீதித் தலைவர்களின் பெயர்களை திட்டமிட்டு நீக்கவில்லை. இதற்கு முந்தைய ஆட்சியில் நீக்கப்பட்டதா என்பதை ஆய்வு செய்தோம். அதன்படி திமுக ஆட்சியில் கடந்த 3 ஆண்டுகளாக நேரு, பெரியார், அம்பேத்கரின் பெயர்கள் இடஒதுக்கீடு திட்டத்தில் இடம்பெறாமல் இருந்தது. எப்படி நடந்தது என்பது தெரியவில்லை.

ஆனால் நாங்கள் வேண்டுமென்று சமூக நீதிதலைவர்களின் பெயர்களை நீக்கவில்லை. பெரியார், அம்பேத்கரை நாங்கள் கொள்கைத் தலைவர்களாக கொண்டிருக்கிறோம். அவர்களின் பெயர்கள் விரைவில் இடஒதுக்கீடு மானிய கோரிக்கையில் சேர்க்கப்படும்.

## நாகர்கோவிலில் மது குடிக்க பணம் தராதவரை இரும்பு கம்பியால் தாக்கிக் கொல்ல முயற்சி

### ரவுடி உட்பட 3 பேர் கைது

நாகர்கோவில், ஆக. 31

நாகர்கோவில் வெட்டூர்ணிமடம் பகுதியை சேர்ந்தவர் ஈஸ்டர் ராஜ் (45) பெயிண்டர். கடந்த 28ஆம் தேதி இவர் நாகர்கோவில் புது குடியிருப்பு அரசு மதுபான கடைக்கு மது வாங்க சென்றார். அப்போது கிருஷ்ணன் கோவில் மேல கரை பகுதியை சேர்ந்த மைக்கேல் ராஜ் (23), ஹரிஷ் (24), வடசேரி தெலுங்கு செட்டி தெருவை சேர்ந்த அகஸ்டின் எந்த வெள்ளி (31), கிருஷ்ணன்கோவில் யாதவர் தெருவை சேர்ந்த ஹரிஷ் குமார் ( 24) ஆகியோர் ஈஸ்டர் ரஜை வழிமறித்து மது கொடுக்க பணம் கேட்டுள்ளனர். ஈஸ்டர் ராஜ் தன்னிடம் பணம் இல்லை என கூறி சென்றுள்ளார்.

பின்னர் சிறிது நேரம் கழித்து அவர் மது வாங்கி விட்டு வரும்போது மேற்கண்ட நான்கு பேரும் தடுத்து அவரை நிறுத்தி நாங்கள் பணம் கேட்டால் தர மாட்டாயா? என அவரை தடுத்து நிறுத்தி இரும்பு கம்பியால் தாக்கியதாக கூறப்படுகிறது. சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்ததும் நான்கு பேரும் மிரட்டல் விடுத்து தப்பி சென்றுவிட்டனர். ஈஸ்டர் ராஜ் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ கல்லூரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இது குறித்த புகாரின் பேரில் வடசேரி இன்ஸ்பெக்டர் மோகன் ஐயர் சம்பந்தப்பட்ட நான்கு பேர் மீதும் கொலை முயற்சி உள்ளிட்டபிரிவுகளில்வழக்கு பதிவு செய்து அகஸ்டினைதவிரமூன்றுபேரை கைது செய்தனர்.

இதில் மைக்கேல் ராஜ் மீது ஏற்கனவே பல வழக்குகள் உள்ளன. காவல் நிலைய குற்றவாளிகள் சரித்திர பதிவேடு பட்டியலில் அவர் இடம்பெற்றுள்ளார் என போலீசார் கூறினர்.

## குமரியில் ஹெல்மெட் பைன் என்ற பெயரில் போலி செயலி மூலம் கண்டக்டர், கொத்தனாரிடம் ரூ 1.40 லட்சம் மோசடி

நாகர்கோவில், ஆக. 31

குமரி மாவட்டத்தில் விபத்துக்களை குறைக்கும் வகையில் குமரி போலீஸ் எஸ் பி ஸ்டாலின் உத்தரவின் பெயரில் போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள். இதன் எதிரொலியாக குமரி மாவட்டம் முழுவதும் 11 இடங்களில் தானியங்கி ஏஐ கேமராக்கள் வைக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு தானியங்கி கேமராவால் அபராதம் விதிக்கப்படும் நபகளுக்கு அவர்களின் செல்போனுக்கு அந்த தகவல் அறிவிக்கப் படுவது வழக்கம்.

தற்போது இதை சாதகமாக்கி குமரி மாவட்டத்தில் மோசடிகள் அரங்கேறி வருகின்றன. குறிப்பாக வட்டார போக்குவரத்து அலுவலக செயலி என்ற பெயரில் மெசேஜ் அனுப்பப்பட்டு பணம் பறிக்கப்படுகிறது. இந்த செயலியை யாரும் கிளிக் செய்ய வேண்டாம் என காவல்துறை எச்சரித்துள்ளது. ஆனாலும் இந்த செயலி மூலம் ஏமாற்றும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமாக உள்ளது. இது தொடர்பாக காவல் நிலையங்களில் புகார்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

நாகர்கோவில் அடுத்த இறச்சகுளம் பகுதியை சேர்ந்த அருணாச்சலம் (48) என்ற அரசு பஸ் கண்டக்டர் செல்போனுக்கு கடந்த சில நாட்களுக்கு முன் ஆர்டிஓ செல்லான் செயலி வந்துள்ளது. ஹெல்மெட் அவராதம் விதித்திருக்கிறார்கள் என செயலியை அவர் ஓபன் செய்தபோது, அவர்வங்கி கணக்கிலிருந்து ரூபாய் 50 ஆயிரத்து 585 ரூபாய் பணம் மாயமானது. அதன்பின்னர்தான் ஏமாற்றப்பட்டது அவர் உணர்ந்தார் இது குறித்து பூதப்பாண்டி போலீஸ் நிலையத்தில் அருணாச்சலம் புகார் அளித்துள்ளார்.

இது போன்று நாகர்கோவில் அடுத்த எட்டாமடைப் பகுதியை சேர்ந்த வர்கீஸ் (56) என்ற கொத்தனார் செல்போனுக்கும் மெசேஜ் வந்துள்ளது. அதை அவர் கிளிக் செய்ததும் வங்கியில் இருந்து ரூபாய் 90 ஆயிரத்து 241 ரூபாய் எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் பூதப்பாண்டி போலீசார்வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த இரு வழக்குகளும் சைபர் கிரைம் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு விசாரிக்கப்படும் என தெரிகிறது.

# மங்காடு பகுதியில் சாலை பணிகள் கலெக்டர், அமைச்சர் ஆய்வு



நாகர்கோவில், ஆக.31

கன்னியாகுமரி மாவட்டம் மங்காடு பகுதியில் நெடுஞ்சாலை துறையின் சார்பில் நடைபெற்று வரும் சாலை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைவர் மு.பிரதாப் தலைமையில் சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் அமைச்சர் கூறியதாவது:

தமிழ்நாடு அரசின் பல்வேறு நலத்திட்ட பணிகள் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வருகிறது. அதன்ஒருபகுதியாக கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை, மங்காடு உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் சாலை பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மங்காடு சாலை பகுதியில் கி.மீ. 0/8 முதல் 8/0 வரை உள்ள சாலையை ஒற்றை வழிச்சாலையிலிருந்து இடைநிலைச் சாலையாக அகலப்படுத்தி, சாலை வலுப்படுத்தும் பணி ரூ.5.8 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. மங்காடு சாலையை அகலப்படுத்தும் பணி 35% நிறைவு பெற்றுள்ளது. குறிப்பாக மொத்தம் 7.20 கி.மீ. நீளமுள்ள இந்த சாலைப் பணிகள் நிறைவடைந்தால், அப்பகுதியில் சாலைப் போக்குவரத்து வசதி மற்றும் சாலைத் தரம் மேம்படும். பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் நெடுஞ்சாலை துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# முஞ்சிறை அருகே அனுமதியின்றி செம்மண் கடத்த முயற்சி

## 4 பேர் மீது வழக்கு பதிவு

புதுக்கடை, ஆக. 31

புதுக்கடை அருகே உள்ள முஞ்சிறை பகுதியில் பகுதியில் அரசு அனுமதியின்றி செம்மண் கடத்துவதாக முஞ்சிறை கிராம நிர்வாக அலுவலருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதை அடுத்து கிராம நிர்வாக அலுவலர் மரிய ஜெனிஃபர் (32) என்பவர் சம்பந்தப்பட்ட பகுதியில் சென்று பார்வையிட்டார்.

அப்போது குறிப்பிட்ட ஒரு நிலத்திலிருந்து உரிய அரசு அனுமதியோ, உரிமமோ இன்றி செம்மண்ணை டிப்பர் வாகனத்தில் ஏற்றி கொண்டு இருந்தனர். கிராம நிர்வாக அலுவலர் அங்கு சென்றதை பார்த்தவுடன் டிப்பர் லாரியையும் நிறுத்திவிட்டு அங்கிருந்து டிரைவர், வாகன உரிமையாளர் உட்பட அனைவரும் தப்பி ஓடிவிட்டனர்.

இது குறித்து கிராம நிர்வாக அலுவலர் புதுக்கடை போலீசாரிடம் புகார் அளித்தார். புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்முத்துகிருஷ்ணன் நில உரிமையாளர்கள் பிரீத்தி மற்றும் மோகனகுமார், டிப்பர் வாகனத்தின் டிரைவர் மற்றும் வாகன உரிமையாளர் ஆகிய நான்கு பேர் மீது வழக்கு பதிவு செய்து செய்தார். இன்ஸ்பெக்டர் மீனா விசாரித்து வருகிறார்.

# ஈரோடு மாநகராட்சியில் கழிவு பஞ்சுகளை அகற்றாததால் சுகாதார கேடு நடவடிக்கை எடுக்க வணிக சங்க கூட்டமைப்பு வலியுறுத்தல்




ஈரோடு ஆக 30

ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு பொதுக்குழு கூட்டம் தலைவர் ராஜமாணிக்கம் தலைமையில் ஈரோட்டில் நடந்தது. துணை தலைவர் சண்முக சுந்தரம் வரவேற்றார். பொது செயலாளர் ரவிச்சந்திரன் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் முருகானந்தம் நிதி நிலை வாசித்தார். முடிவில் இணைசெயலாளர்பழனிசாமி நன்றி கூறினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு மரம் அறுப்பு ஆலைகள் மாசு ஏற்படுத்துவது இல்லை. எனவே மாசுகட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி இல்லாமல் உரிமம் புதுப்பித்தல் நடைமுறையை மேற்கொள்ள வேண்டும். ஈரோடு மாநகராட்சியில் வீட்டு வரி மிக அதிகமாக உள்ளது. எனவே வரியை குறைக்க நடவடிக்கை எடுப்பதுடன் ஆண்டு தோறும் உயர்த்தப்படும் சொத்து வரியை நிறுத்தி வைக்க வேண்டும். ஜவுளிக்கான ஜி எஸ் டி வரி 5 சதவீத வரியை குறைத்து 3 சதவீதம் ஆக மத்திய அரசு குறைக்க வேண்டும். ஈரோடு பெரியார் நகர் வழியாக ரெயில் நிலையம் வரை உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி 80 அடி சாலையை அமைக்க வேண்டும். ஈரோடு மாநகராட்சி பகுதியில் உள்ள விசைத்தறி பஞ்சு கழிவுகளை அகற்றாததால் சுகாதார கேடும் தீ விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே பஞ்சு கழிவுகளை ஈரோடு மாநகராட்சி உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கண்ட தீர்மானங்கள் உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

# காப்புக் காட்டில் தொல்காப்பியர் அறக்கட்டளையின் ஆலோசனை கூட்டம்



மார்த்தாண்டம், ஆக.31

புதுக்கடை அருகேயுள்ள காப்புக்காடு, தொல்காப்பியர் அறக்கட்டளையின் ஆலோசனைக் கூட்டம், தொல்காப்பியர் சிலை வளாகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்திற்கு அறக்கட்டளைத் தலைவர் பாஸ்கரன் தலைமை வகித்தார். துனணத்தலைவர்சுரேஷ், இணைச்செயலாளர் ஷஞ்சய் ஷாலஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியை புஷ்பலதா தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். செயலாளர் பேராசிரியர் செ. சஜீவ் அனைவரையும் வரவேற்றார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக குழித்துறை ரோட்டரி சங்கத் தலைவர் ஸ்ரீநாகேஷ் கலந்து கொண்டார். பெற்றோர் ஆசிரியர் கழக மாநில துணைத் தலைவர் சிந்துகுமார், பணி நிறை வணிக வரித் துறை ஆய்வாளர் கோவிந்தராஜ், எழுத்தாளர் ஹரி கிருஷ்ண தாஸ், ஆசிரியை ஷோபா, புதுக்கடை பேரூராட்சியின் முன்னாள் தலைவர் மோகன குமார், பணி நிறை தலைமை ஆசிரியர் கிருஷ்ணதாஸ் ஆகியோர் கருத்துரை வழங்கினர். கூட்டத்தில் பள்ளி பயிலும் மாணவர்க்கு தொல்காப்பியத்தின் மொழி இலக்கணம், வாழ்வியல் சார்ந்த கருத்துகளை கொண்டு சேர்ப்பதற்கு ஆவனசெய்திடதீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொருளாளர் ரெவிந்திரன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# கருங்கலில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க கூட்டம்



கருங்கல், ஆக.31

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க கருங்கல் கிளை கூட்டம் 'ஐடிஎல்' டியூஷன் சென்டர் கட்டிடத்தில் நடந்தது. கூட்டத்திற்கு முனைவர் சாமுவேல் ரவி தலைமை தாங்கினார். பொருளாளர் வினோ தேவராஜ் அனைவரையும் வரவேற்று பேசினார். செயலாளர் ஓலக்கோடு ஜான் அறிக்கை வாசித்தார். இதில் மாவட்டத் இணைச் செயலாளர் எம் ஏ சாந்தகுமார் மாவட்ட அமைப்பின் செயல்பாடுகள் பற்றி பேசினார். இதில் அருள்தாஸ், சரவணன், பிரதாப், ஜஸ்டஸ் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் கருங்கல் தனியார் நர்சிங் கல்லூரியில் மாணவி ஆன்சிஜி மற்றும் நேபாளம் நாட்டு வெள்ளப்பெருக்கில் சிக்கி மரணம் அடைந்த அனைவருக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு: மாணவி ஆன்சிஜி மரணத்திற்கு காரணமான நிர்வாகத்தினர் அவரது குடும்பத்திற்கு ரூ ஒரு கோடிக்கும் குறையாமல் இழப்பீடு வழங்க வேண்டும்.

தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம், தொன்மை ஆகியவற்றை உலகிற்கு எடுத்துரைக்கும் கீழடி அமர்நாத் ராமகிருஷ்ணன் ஆய்வறிக்கையை எந்த திருத்தமும் செய்யாமல் உலக தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து ஒன்றிய அரசு வெளியிட வேண்டும். இதற்கு தமிழக அரசு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. செப்டம்பர் 11 ஆம் தேதி பாரதியாரின் நினைவுநாளை முன்னிட்டு பாலூர் ஜங்சனில் படத்திற்கு அஞ்சலி செலுத்தி உறுதியேற்பு நிகழ்ச்சி நடத்த முடிவு செய்யபட்டது. துணைத் தலைவர் செல்வம் நன்றி கூறினார்.

# புதுக்கடை அருகே உறவினர் வீட்டில் வைத்திருந்த தங்க கை செயின் மாயம்; போலீசில் புகார்

புதுக்கடை, ஆக. 31

புதுக்கடை அடுத்த இனயம் புத்தன்துறை பகுதியைசேர்ந்தவர்ஆன்றோ டார்பின் (40). மீனவரான இவர் கடல் தொழில் செய்து வருகிறார். இவரது மனைவியின் சகோதரி அன்ஷா என்பவரது வீட்டில் நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அப்போது சம்பவ தினம் அவரது வீட்டிற்கு ஆன்றோ டார்பின் மற்றும் அவரது மனைவியுடன் குடும்பமாக சென்றிருந்தனர்.

அப்போது ஆன்றோ டார்பின் தனது கையில் கிடந்த 24 கிராம் எடை கொண்ட தங்க கைச்செயின் ஒன்றை உறவினர் வீட்டு பீரோவில் வைத்து விட்டு மீன் பிடிக்க சென்றுள்ளார்.

பின்னர் மாலையில் வந்து உறவினரின் வீட்டு பீரோவில் பார்த்த போது அங்கு வைத்திருந்த தங்கச் செயினை காணவில்லை. வீடு முழுவதும் தேடி பார்த்தும் நகை கிடைக்கவில்லை.

இதை அடுத்து ஆன்றோ டார்பின் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார்.

புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் முத்துகிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து நகையை எடுத்துச் சென்றது யார்? என வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மாயமானதாககூறப்படும் 24 கிராம் நகையின் மதிப்பு ரூ. 90 ஆயிரம் என போலீஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# தருமபுரி கோட்டை அருள்மிகு ஸ்ரீ காமாட்சி உடனாகிய மல்லிகார்ஜுனேஸ்வரர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழா



தருமபுரி ஆகஸ்ட் 31

தருமபுரி நகர், கோட்டை அருள்மிகு ஸ்ரீ காமாட்சி அம்பிகை உடனாகிய மல்லிகார்ஜுனேஸ்வர சுவாமி திருக்கோயிலில் புனருத்தாரண, ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா குடமுழுக்கு (கும்பாபிஷேக) நன்னீராட்டு பெருவிழா சாஸ்திர சம்பிரதாயங்களுடன் வெகுவிமரிசையாக நடைபெற்றது. வேளாவனத்தில் அமைந்ததால் "திருவேளாலீஸ்வரம்" எனவும், கொங்கு நாட்டு சிவ வைப்புத்தலங்களில் ஒன்றாக ஏழாம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் தேவாரப் பாடல்பெற்றசிறப்புடைய இத்திருத்தலத்தில், பஞ்ச பாண்டவர்களில் அர்ஜுனனுக்கு சிவபெருமான் அருள் புரிந்து அவரது சிவ சாபம் நீக்கியதால் இறைவன் "மல்லிகார்ஜுனேஸ்வரர்" எனப் போற்றப்படுகிறார். மனித வாழ்க்கைக்குத் தேவையான பதினெட்டு நற்குணங்களை பதினெட்டு படிகளாகக் கொண்டு, தாய்மையின் முழுவடிவமாய் அன்னை கல்யாண காமாக்ஷி அம்பிகை எழுந்தருளியுள்ள இத்தலத்தில், 'ரத்னத்ரயம்' எனப்படும் மூன்று சூலங்களைத் தாங்கி மகிஷாசூரனை வதம் செய்யும் கம்பீரத் திருக்கோலத்தில் சங்க காலக் கொற்றவை ராஜ துர்க்கையும் அருள் பாலிக்கிறார். மேலும் ஸ்ரீராமனுக்காகத் தமிழ் குறுமுனி அகத்தியர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ சக்ர யந்திரம், நுளம்ப பல்லவர்களால் காமாக்ஷி ஆலயத்தில் செதுக்கப்பட்ட ஸ்ரீராமாயண சுவரோவியச் சிற்பங்கள், கட்டிடக்கலை அதிசயமான தொங்கும் தூண் மற்றும் அஷ்டதிக் பாலகர்களின் சிற்பங்கள் எனப் பல்வேறு கலை நயங்களுடன் இத்தலம் திகழ்கிறது. கடையெழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் நெடுமான் அஞ்சி, தமிழ்ப் புலவர் ஔவையாருக்குச் சாகா வரம் தரும் அரிதான நெல்லிக்கனியை ஈந்த வரலாற்றுப் பெருமை கொண்ட இச்சிவாலயம், சரத்குமார் நதியை தீர்த்தமாக கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றினாலும் சிறப்புற்று விளங்குகிறது. இத்தகைய சிறப்பு மிக்க திருக்கோவிலில் விமானங்கள் புதுப்பிக்கப்பட்டு கருங்கற்களால் சிற்ப மற்றும் வர்ண வேலைப்பாடுகள் நிறைவடைந்தது தொடர்ந்து ஆகஸ்ட் 27ம் தேதி யாகசாலை பூஜைகளுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வாக விநாயகர், சுப்பிரமணியர், ராஜ தூர்க்கை, சித்தேஸ்வரர், காலபைரவர் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு திருக்குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து யாகசாலையில் இருந்து மகாபூர்ணாஹூதிக்குப் பின்புனித கலசங்கள் புறப்பட்டுஅருள்மிகுகாமாட்சி அம்பிகை மற்றும் மல்லிகார்ஜுன சுவாமி விமான கோபுரங்களுக்கு மகா கும்பாபிஷேகம் விமர்சியாக நடைபெற்றது.தொடர்ந்து மூலாலய தெய்வங்களுக்கு புனித நீரால் நன்னீரட்டு செய்யப்பட்டு மகா அபிஷேகம், தீபாராதனைகள் மற்றும் உலக நன்மை வேண்டி கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்றது. பின்னர் சுவாமிக்கும், அம்மாளுக்கும் திருக்கல்யாண வைபவம் அரோகரா கோஷத்துடன் கோலாகலமாக நடைபெற்றது .முன்னதாக வெள்ளிக்கிழமை 28/ 8/ 2026 நடைபெற்ற யாகசாலை பூஜையில் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர். மகாதேவன் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். அவருக்கு திருக்கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டு அருட்பிரசாதங்கள் வழங்கப்பட்டன. இப்புனித பெருவிழாவில் இந்து சமய அறநிலைத்துறை அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், திருப்பணி உபயதாரர்கள் மற்றும் தருமபுரி சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த பல்லாயர்களுக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து அருள் பெற்றனர். திருக்கோவில் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

**நீரை சேமிப்போம்! மரங்களை வளர்ப்போம்!**

# விளாத்திகுளத்தில் வீ த லீடர்ஸ் அமைப்பின் சார்பாக மினி மாரத்தான் போட்டி



விளாத்திகுளம் ஆகஸ்ட் 31.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கையை பாதுகாப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில்வீதலீடர்ஸ் ஃபவுண்டேஷன்அமைப்பின் நிறுவனர் அண்ணாமலையின் அறிவுறுத்தலின்படி தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி சார்பில் மினி மாரத்தான் போட்டி நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டியில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் என 4 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் விளாத்திகுளம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என மொத்தம் 291 பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ஓடினர். இதில் ஆண்கள் 75 பேர், பெண்கள் 47 பேர், சிறுவர்கள் 105 பேர், சிறுமிகள் 64 பேர் என மொத்தம் 291 பேர் பங்கேற்றனர். இந்த மினி மாரத்தான் போட்டியை விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கடம்பூர் அருண் ராஜா கொடியை அசைத்து தொடங்கி வைத்தார். ஆண்கள் பிரிவு. முதலாவதாக நடைபெற்ற ஆண்களுக்கான 14 கிலோமீட்டர் மினி மாரத்தான் போட்டியில், ராஜபாளையத்தைச் சேர்ந்த மாரிசரத் முதலிடம் பிடித்து முதல் பரிசை பெற்றார். பெங்களூரைச் சேர்ந்த ராஜேஷ் குமார் இரண்டாம் பரிசையும், ஊட்டியைச் சேர்ந்த நரேந்தர் மூன்றாம் பரிசையும் பெற்றனர். பெண்கள் பிரிவு. தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான 10 கிலோமீட்டர் மினி மாரத்தான் போட்டியில், திருச்சியைச் சேர்ந்த அஞ்சலி முதலிடம் பிடித்து முதல் பரிசை பெற்றார். புதூரைச் சேர்ந்த உதயாதர்ஷினி இரண்டாம் பரிசையும், ஊட்டியைச் சேர்ந்த சோனாலி மூன்றாம் பரிசையும் பெற்றனர். சிறுவர்கள் பிரிவு. சிறுவர்களுக்கான 4 கிலோமீட்டர் போட்டியில் மஞ்சநாயக்கன்பட்டியைச் சேர்ந்த அவினாஷ் முதல் பரிசையும், விளாத்திகுளத்தைச் சேர்ந்த கௌதம் இரண்டாம் பரிசையும், சிவகாசியைச் சேர்ந்த இளையராஜா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

சிறுமியர் பிரிவு. சிறுமியருக்கான 4 கிலோ மீட்டர் போட்டியில் புதூர் அரசு பள்ளி மாணவி முருகசெல்வி முதலிடம் பிடித்து முதல் பரிசை பெற்றார். ஆனைக்கூட்டத்தைச் சேர்ந்த சுதந்திர லட்சுமி இரண்டாம் பரிசையும், அதே பகுதியைச் சேர்ந்த நிபிதா பாண்டி மூன்றாம் பரிசையும் பெற்றனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை, வெற்றி கோப்பை மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பங்கேற்பாளர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் காட்டுராஜா, நேஷனல் கந்தசாமி, காமாட்சி அருணாச்சலம், பொன்ராஜ், மகேஸ்வரன், சிவபெருமாள், சரண்ராஜ், சீனி, தங்கம், வெங்கடேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் சத்தியசீலன், மாதவன், ராஜேஷ் கனி ஆகியோரும், கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் சீனிவாசன், வேல்முருகன் உள்ளிட்ட விளாத்திகுளம் தொகுதி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்தினர்.

# அமைச்சர்களின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது, விஜய் தலைமையிலான அரசு ஐந்தாண்டுகள் நீடிப்பது கடினம்

## பாஜக மாநில துணைத் தலைவர் கே.பி. இராமலிங்கம்

கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 31:

கிருஷ்ணகிரியில் பாஜக மாநில துணை தலைவர் KP இராமலிங்கம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர்., பாரத பிரதமர் மோடியின் பிறந்த நாளான செப்டம்பர் 17ஐ, இந்தியா மட்டுமல்ல உலகமே கொண்டாட எதிர்பார்ப்புடன் உள்ளது. தமிழகத்தில் பாஜக ஆட்சிக்கு வர முடியா விட்டாலும் இந்தியா முழுவதும் நடைபெற்ற தேர்தலில் பாஜக வெற்றி பெற்றுள்ளது. தமிழகத்தில் உள்ள மக்களும் எங்கள் மக்கள் தான் என்று பிரதமர் தமிழக மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கி வருகிறார். தமிழகத்தில் ஆட்சி பொறுப்புக்கு வந்த தவெக அரசின் சில அமைச்சர்களின் பின்னணி மற்றும் அவர்களின் பேச்சை பார்க்கும் போது விஜய் தலைமையிலான அரசு ஐந்தாண்டுகள் நீடிப்பது கடினமாக உள்ளது. மேலும் அனைவருக்கும் பொதுவான சபாநாயகர் JCD பிரபாகர் நன்கு அனுபவம் வாய்ந்தவர். சிறப்பாக செயல்பட கூடியவர். ஆனாலும் சபாநாயகர் இருக்கையில் அமர்ந்து கொண்டு மத போதகர் போன்று வன்னிய கிருஸ்துவர்களுக்கு இட ஒதுக்கீடு கேட்பது மரபு அல்ல. இதனை எல்லாம் முதல்வர் விஜய் கண்டிக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் ஐந்தாண்டுகள் நீடிக்க வாய்ப்பு இல்லையேல் கடினமாகும். தமிழகத்தில் பரந்தூர் விமான நிலையம், ஓசூர் மெட்ரோ ரயில் பாதை, விளையாட்டு மைதானம் போன்ற பல திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்தும் திமுக ஆட்சி காலத் தாமதம் செய்ததால் அதன் பின்னர் வந்த தவெக அரசு அந்த திட்டங்களை ரத்து செய்கிறது. எனினும் மக்களுக்கு பயனுள்ள எதிர் கால திட்டங்களை ரத்து செய்வது தமிழகத்தின் வளர்ச்சியை பாதிக்கும் என்று கூறினார். உடன் மண்டல தலைவர்கள் வெங்கடேசன், முனிராஜ், மாவட்ட தலைவர்கள் கவியரசு, நாராயணன், மற்றும் சரஸ்வதி வித்யாலயா பள்ளி அன்பரசன் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# தஞ்சாவூர் அடுத்துள்ள ஒரத்தநாடு வட்டம் நடுவூரில் ரூ.170 கோடி மதிப்பில் நெல் அரிசி சேமிப்பு கிடங்கு கட்டுமான பணி

## மாவட்ட கலெக்டர் ரேவதி ஆய்வு



தஞ்சாவூர் ஆகஸ்ட் 31 தஞ்சாவூர் அடுத்துள்ள ஒரத்தநாடு வட்டம் நடுவூர் கிராமத்தில் ரூபாய் 170.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நெல் மற்றும் அரிசி சேமிப்பு கிடங்கவளாகப்பணிகள் மற்றும் மாவட்ட கால்நடை பண்ணையை கலெக்டர் ரேவதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம் நடுவூர் கிராமத்தில் தமிழ்நாடு நுகர்பொருள்வாணிபக் கழகம் சார்பில் நெல் மற்றும் அரிசி சேமிப்பிற்காக மிகப்பெரிய சேமிப்பு கிடங்கு வளாக கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. நடுவூர் கிராமத்தில் 23.32 எக்டேர் பரப்பளவில் கட்டப்பட்டு வரும் இந்த திட்டத்தின் கீழ் மொத்தம் 1 லட்சம் டன் நெல் மற்றும் அரிசி சேமித்து வைக்கும் வகையில், அரை மூடிய சேமிப்பு கிடங்கு வளாகம் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகள் ரூபாய் 170.22 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

இதனை கலெக்டர் ரேவதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார் இந்த ஆய்வின் போது கட்டுமான பணிகளின் தற்போதைய நிலை, பணிகளின் தரம் மற்றும் திட்டமிட்டு காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவு செய்வதற்கான நடவடிக் கை குறித்து கலெக்டர் கேட்டறிந்தார் .மேலும் அவர் கட்டுமான பணிகளில் உரிய தர நிலைகளை கடைப்பிடித்து விரைவாகவும், சிறப்பாகவும், மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்

அதனைத் தொடர்ந்து கலெக்டர் ரேவதி ஒரத்தநாடு வட்டம் நடுவூர் கிராம கால்நடை பண்ணையில் உள்ள பால் பண்ணை கால்நடை ஆடு மற்றும் தீவனப் பிரிவுகள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் பொதுப்பணி துறையின் மூலம் நடைபெற்று வரும் கால்நடை கொட்டகை கட்டுமான பணிகளை யும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக உதவி பொறியாளர் தர்மராஜ் மாவட்ட கால்நடை பண்ணை துணை இயக்குனர்முருகன், கால்நடை உதவி மருத்துவர் குரு சரண்மற்றும்பலர்கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் அருகே இலவச கண்புரை அறுவை சிகிச்சை முகாம்



திருவள்ளூர் அடுத்த மஞ்சாகுப்பம், ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளி வளாகத்தில் அரவிந்த் கண் மருத்துவமனை, சென்னை சார்பில் இலவச கண்புரை அறுவை சிகிச்சை முகாம் சமூக சேவகர் கோதண்டன், தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இதில் சிறப்பு அழைப்பாளராக பாட்டாளி மக்கள் கட்சி மாநில இளைஞர் அணி சங்க செயலாளர் பாலா (என்ற) பாலயோகி, கலந்து கொண்டு முகாமைதுவக்கிவைத்து முகாமை பார்வையிட்டார்.

இம்முகாமில் 200க்கும் மேற்பட்டோர் கண் பரிசோதனை செய்யப்பட்டு அதில் பார்வைத் திறன் மதிப்பீடு, கண்ணாடி பவர் பரிசோதனை (ரிஃப்ராக்ஷன்), கண்புரை (Cataract) பரிசோதனை, கண் அழுத்த நோய் (Glaucoma) பரிசோதனை, கண் உள் அழுத்தம் (IOP) அளவீடு, கண்ணின் முன்பகுதி பரிசோதனை, விழித்திரை (Retina) பரிசோதனை, உலர்கண் (Dry Eye) மதிப்பீடு உள்ளிட்ட பரிசோதனை செய்யப்பட்டு, அறுவை சிகிச்சைக்காக நிபுணர் ஆலோசனை மற்றும் உரிய பரிந்துரையும் வழங்கப்பட்டன.

பின்னர் முகாம்களில் கலந்து கொண்ட பொதுமக்களுக்குக் பார்வை குறைபாடுகள் உள்ளவர்களை கண்டறி பட்டு அவர்களுக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சை அளிக்கப்படுவதற்காக சென்னை பூந்தமல்லி உயர் சாலையில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் சொல்லப்பட்டன

இந்த நிகழ்வை கண்ட அனைவரும் சமூக சேவகர் கோதண்டன் அவர்களை வாழ்த்தி வருகின்றனர் இந்நிகழ்ச்சியில் கிராமப் பெரியோர்கள் குப்புசாமி குப்பன் மோகன் கன்னியப்பன் சக்கரவர்த்தி கண்ணன் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

# அனந்தபுரி எக்ஸ்பிரஸ் ரயில் குழித்துறை ரயில் நிலையத்தில் 5 நிமிடங்கள் நிற்க வேண்டும்

## ரயில் பயணிகள் சங்கம் கோரிக்கை

நாகர்கோவில், ஆக.31 குமரி மாவட்டத்தில் கடந்த 2002ஆம் ஆண்டு நாகர்கோவில் சென்னை வழித்தடத்தில் வாரத்திற்கு நான்கு நாட்கள் இயங்கும் சிறப்பு ரயிலாக அறிமுகப்படுத்தப்பட்டது அனந்தபுரி எக்ஸ்பிரஸ் ரயில். குமரி மாவட்ட பயணிகளிடையே இந்த ரயிலுக்குக் கிடைத்த பெரும் வரவேற்பைத் தொடர்ந்து, இதை நிரந்தர ரயிலாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் எழுந்தது. அதன்படி அனந்தபுரி எக்ஸ்பிரஸ் என்ற பெயரில் நிரந்தர ரயிலாக அறிவிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. சுமார் 14 லட்சம் மக்கள் தொகை கொண்ட கல்குளம், திருவட்டார் மற்றும் விளவங்கோடு ஆகிய தாலுகாக்களைச் சேர்ந்த பயணிகள் (பாறசாலை, குழித்துறை மற்றும் இரணியல் ரயில் நிலையங்களைச் சார்ந்தவர்கள்) தங்களதுமாநிலத்தலைநகரான சென்னைக்குச் செல்ல இந்த ரயிலையே பெரிதும் சார்ந்துள்ளனர். அத்துடன், தமிழக எல்லைக்குள் அதிகபட்சமாக 765 கி.மீ தொலைவு பயணித்து, அதிகமான மக்களுக்குப் பயன்படும் ஒரே தினசரி ரயில் சேவையாகவும் இது விளங்குவது குறிப்பிடத்தக்கது.

தற்போது, இந்த ரயில் இரு மார்க்கங்களிலும் பயணிக்கும் போது திருவனந்தபுரம் மற்றும் திருநெல்வேலி ரயில் நிலையங்களில் 5 நிமிடங்களும்; நாகர்கோவில் டவுன் மற்றும் குழித்துறை ரயில் நிலையங்களில் 3 நிமிடங்களும்; வள்ளியூரில் 2 நிமிடங்களும்; நெய்யாற்றின்கரை, பாறசாலை, இரணியல், ஆரல்வாய்மொழி, நாங்குநேரி ஆகிய நிலையங்களில் 1 நிமிடமும் நின்று செல்கிறது.

ஆனால், மறுமார்க்கமாகச் சென்னையிலிருந்து கொல்லம் நோக்கிச் செல்லும் போது, குழித்துறை ரயில் நிலையத்தில் மட்டும் நிற்கும் நேரம் 1 நிமிடமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் அவசர அவசரமாக இறங்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இதன் காரணமாக, கடந்த மாதம் குழித்துறை ரயில் நிலையத்தில் இறங்க முயன்ற பெண் பயணி ஒருவர் தவறி விழுந்து எலும்பு முறிவு ஏற்பட்டது பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

சென்னை நோக்கிச் செல்லும் போது, அதிக பயணிகள் ஏறும் நிலையங்களில் திருவனந்தபுரத்திற்கு அடுத்தபடியாக இரண்டாமிடத்தில் குழித்துறையும் (சில நாட்களில் திருநெல்வேலியும்), மூன்றாமிடத்தில் இரணியல் மற்றும் நாகர்கோவில் டவுன் ஆகிய நிலையங்களும் உள்ளன. எனவே, பயணிகள் நடமாட்டத்தை கருத்தில் கொண்டு ரயில்வே நிர்வாகம் கால அட்டவணையில் மாற்றம் செய்ய வேண்டும். குழித்துறை மற்றும் நாகர்கோவில் டவுன் ரயில் நிலையங்களில் நின்று செல்லும் நேரத்தை 5 நிமிடங்களாக உயர்த்த வேண்டும். இரணியல் மற்றும் வள்ளியூர் ரயில் நிலையங்களில் நின்று செல்லும் நேரத்தை 3 நிமிடங்களாக உயர்த்த வேண்டும். என கன்னியாகுமரி மாவட்ட ரயில் பயணிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

# களியக்காவிளை அருகே 3 கிலோ கஞ்சா பறிமுதல்;வாலிபர் கைது

களியக்காவிளை, ஆக.31 குமரி மாவட்டம், களியக்காவிளை அருகே கேரளத்திலிருந்து விற்பனைக்காககொண்டு வந்த 3 கிலோ கஞ்சாவை போலீஸார் பறிமுதல் செய்து, இளைஞரை கைது செய்தனர்.

களியக்காவிளை காவல் நிலைய உதவி ஆய்வாளர் மகேந்த் தலைமையிலான போலீஸார் நேற்று முன்தினம் இரவு களியக்காவிளை சோதனைச் சாவடி அருகில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கேரளத்திலிருந்து களியக்காவிளை நோக்கி சந்தேகப்படும் வகையில் நடந்து வந்த இளைஞரை பிடித்து விசாரித்தனர். அவர் கேரள மாநிலம் பாறசாலை பகுதியைச் சேர்ந்த பினு மகன் விபின் (26) என்பது தெரிந்தது. முன்னுக்குப் பின் முரணாக தெரிவித்ததையடுத்து அவரிடமிருந்த பையை போலீஸார் சோதனை செய்தனர். அதில், தமிழக பகுதியில் விற்பனை செய்வதற்காக 3 கிலோ கஞ்சா கொண்டு வந்தது தெரியவந்தது. அவரிடமிருந்து கஞ்சாவை போலீஸார் பறிமுதல்செய்ததுடன்விபினை கைது செய்தனர். இதுகுறித்து களியக்காவிளை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர்.

# பாரூரில் வீதா லீடர்ஸ் சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு

## தென்பெண்ணை ஆறு சுத்தம், பனை விதை நடவு மற்றும் மரக்கன்றுகள் வழங்கல்




கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் ஊராட்சியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில், வீதா லீடர்ஸ் அமைப்பின் சார்பில் தென்பெண்ணை ஆறு சுத்தம் செய்தல், ஏரிக்கரைகளில் பனை விதை நடவு மற்றும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி ஜனார்த்தன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் துளசிதரன், செந்தில், பெருமாள், மாரிமுத்து, ஆனந்தராஜ் உள்ளிட்ட வீதா லீடர்ஸ் அமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் திரளாக கலந்து கொண்டு தென்பெண்ணை ஆற்றுப் பகுதியில் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர். தொடர்ந்து, நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் ஏரிக்கரைகளில் பனை விதைகள் நடப்பட்டன. மேலும்,பசுமைவளத்தை அதிகரிக்கும் வகையில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களை காக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினர்

# தருமபுரியில் ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் விழா



தருமபுரி ஆகஸ்ட் 31 தருமபுரி எம்.ஏ. தங்கவேல் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா வெகு விமரிசையக நடைபெற்றது. இதையொட்டி கடந்த ஆகஸ்ட் 28ம் தேதி வெள்ளிக்மை முதல் சிறப்பு பூஜைகள், கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் உள்ளிட்ட பல்வேறு யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து ஆகஸ்ட் 29 ம் தேதி சனிக்கிழமை காலை மற்றும் மாலை நேரங்களில் சிறப்பு யாகசாலை பூஜைகள், ஹோமங்கள் மற்றும் பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவின் முக்கிய நிகழ்வான அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன் ஆகஸ்ட் 30 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வெகு விமர்சையாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கோபுர கலசத்திற்கு புனித தீர்த்தத்தை ஊற்றி பூஜை ,தீபாரதனை காண்பித்து விட்டு புனித தீர்த்தத்தை பக்தர்கள் மீது சிவாச்சாரியார்கள் தெளித்தனர். பின்னர் சுவாமிக்கு அபிஷேகம் நடைபெற்று சிறப்பு அலங்காரத்துடன் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.மகா கும்பாபி ஷேகத்தை முன்னிட்டு கோவில் வளாகம் முழுவதும் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு பக்தர்கள் வசதிக்காக தேவையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டது.விழாவில் தருமபுரி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். பின்னர் அனைவருக்கும் கோயில் நிர்வாகத்தின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.

# செட்டிநாடு ஊராட்சி தேத்தாம்பட்டியில் தவெக கொடியேற்று விழா, மினி பொதுக்கூட்டம்

## மக்களின் அனைத்து கோரிக்கைகளையும் படிப்படியாக நிறைவேற்ற எம்.எல்.ஏ. உறுதி



காரைக்குடி: சிவகங்கை வடக்கு மாவட்டம், சாக்கோட்டை மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட செட்டிநாடு ஊராட்சி, தேத்தாம்பட்டி கிளையில் தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியேற்று விழா மற்றும் மினி பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

விழாவிற்கு சாக்கோட்டை மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் க. சரத்பாலமுருகன் தலைமை வகித்தார். மாவட்ட மகளிரணி செயலாளர்ஸ்ரீதேவி முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். சீனிவாசசேதுபதி, கழகக் கொடியை ஏற்றி வைத்து, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.தொடர்ந்து நடைபெற்ற மினி பொதுக்கூட்டத்தில் பேசிய எம். எல்.ஏ., தேத்தாம்பட்டி கிராமத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாடு, தெருவிளக்கு வசதி, சமுதாயக்கூடம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் தொடர்பாக பொதுமக்கள் முன்வைத்துள்ள அனைத்து கோரிக்கைகளும் படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

மேலும், அருகிலுள்ள அரசு மருத்துவமனை அனைத்து வசதிகளுடன் விரிவுபடுத்தப்படும் என்றும், தேத்தாம்பட்டி கிராமத்திற்கு அரசுப் பள்ளி கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "இது உங்கள் ஆட்சி. 50 ஆண்டுகளுக்குப் பிறகு லஞ்சம், ஊழல் ஒழிக்கப்பட்டு நேர்மையான ஆட்சி நடைபெற்று வருகிறது" என்று குறிப்பிட்டார். மேலும், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைத்ததுடன், மக்களுக்காக தொடர்ந்து பாடுபடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார் இதனைத் தொடர்ந்து, சாக்கோட்டை மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் க. சரத்பாலமுருகன், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கிப் பேசினார்.

நிர்வாகிகள் பங்கேற்ப நிகழ்ச்சியில் பள்ளத்தூர் பேரூர் இணைச் செயலாளர் முருகானந்தம், கானடுகாத்தான் பேரூர் செயலாளர் முத்துகுமார், பேரூர் பொருளாளர் கணேசன், சோலை, சாக்கோட்டை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜான் மேஜர், சாக்கோட்டை மேற்கு ஒன்றியத் துணைச் செயலாளர் சுகன்யா, செயற்குழு உறுப்பினர்கள் தினேஷ், பாண்டியராஜன், வடக்கு ஒன்றியக் கிளைச் செயலாளர் பெரிய கருப்பன், சாக்கோட்டை மேற்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர் பிரதீப் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

சிறப்பான ஏற்பாடுகள்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேத்தாம்பட்டி கிளைச் செயலாளர் சுரேஷ், செட்டிநாடு ஊராட்சிக் கழகச் செயலாளர் சிவசுப்பிரமணியம், இணைச் செயலாளர் சந்துரு மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள்சிறப்பாக செய்திருந்தனர். விழாவின் நிறைவில், சாக்கோட்டை மேற்கு ஒன்றிய இணைச் செயலாளர் மணிகண்டன் நன்றி கூறினார். இதையடுத்து கொடியேற்று விழா மற்றும் மினி பொதுக்கூட்டம் இனிதே நிறைவுற்றது. விழாவில் திரளான கழகத் தோழர்கள், தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சாமித்தோப்பு அருகே காதல் திருமணம் செய்த இளம் பெண்ணை கடத்திய தந்தை உட்பட 21 பேர் மீது வழக்கு

நாகர்கோவில்,ஆக. 31 குமரி மாவட்டம் சாமிதோப்பு பகுதியை சேர்ந்த வர்தங்கதுரைமகன்ஜெகன் (30) இவர்கடந்த ஒரு ஆண்டுக்கு முன் முகிலன் குடியிருப்பை சேர்ந்த சுரேஸ் என்பவர் மகள் திவ்யதர்ஷினி (21) என்பவரை காதலித்து திருமணம் செய்துள்ளார். திவ்யதர்ஷினி கல்லூரி மாணவி ஆவர். இன்ஸ்டா மூலம் பழக்கம் ஏற்பட்டு பின்னர் காதலாக மாறி இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

இந்த திருமணத்திற்கு திவ்யதர்ஷினி வீட்டில் தொடக்கத்திலிருந்து எதிர்ப்பு இருந்துள்ளது. திருமணத்திற்கு பின் அவரை கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்ல முயற்சிகள் நடந்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால் திவ்யதர்ஷினி செல்லவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் 28ஆம் தேதி மாலை 5 மணி அளவில் வீட்டில் திவ்யதர்ஷினியும் அவரது மாமியார் விஜயா (58) என்பவரும் இருந்துள்ளனர். அப்போது திவ்யதர்ஷினி தந்தை சுரேஷ் தலைமையில் சுமார் 20 பேர் கொண்ட கும்பல் வீட்டுக்குள் நுழைந்து பொருட்களை அடித்து உடைத்தனர். பின்னர் திவ்யதர்ஷினியை வலுக்கட்டாயமாக காரில் ஏற்றி கடத்தி சென்றனர்.

இந்த சம்பவத்தில் ஈடுபட்டவர் பெரும் பரபரப்பானவர் பெண்கள் என கூறப்படுகிறது. இது குறித்து விஜயா தென்தாமரை குளம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

புகாரின் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர்.

அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர்.

தற்போது சுரேஷ் மற்றும் கண்டால் தெரியும் 21 பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

திவ்யதர்ஷினியை எங்கு அழைத்து சென்றுள்ளனர் என்பது தெரியவில்லை. அவருக்கு வலுக்கட்டாயமாக மறுமணம் செய்ய முயற்சி நடப்பதாக ஜெகன் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

# குமரி அரசு மருத்துவக் கல்லூரியில் தூய்மை பணியாளர்கள், காவலாளிகள்

## 2வது நாளாக போராட்டம்; நோயாளிகள் பாதிப்பு



நாகர்கோவில், ஆக.31 கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் பகுதியில் இயங்கி வருகிறது. இங்குள்ள தூய்மை பணியாளர்கள், செக்யூரிட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு தனியார் நிறுவனர் சார்பில் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 24 மணி நேரமும் ஷிப்ட் முறையில் குறைந்தபட்சம் 200 க்கும் மேற்பட்டவர்கள் பணியற்றி வருகிறார்கள்.

இந்த நிலையில் சம்பளப் பிடித்தம், பணிச்சுமை உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகள் உள்ளதாக ஏற்கனவே இந்த பணியாளர்கள் குற்றம் சாட்டி வந்தனர். சமீபத்தில் ஹோமோசெக்ஸ் தொடர்பான புகாரர்களும் எழுந்து பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்டவரை மீண்டும் பணிக்கு நியமித்து உள்ளனர். இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள நபர் ஊழியர்களை பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கி உள்ளதாக கூறப்படுகிறது. இதை கண்டித்தும் பணி பாதுகாப்பு கோரியும் 200க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேற்று முன்தினம் முதல் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உடனடியாக ஆசாரிப்பள்ளம் போலீசார் மற்றும் மருத்துவக் கல்லூரி நிர்வாகத்தினர் வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது ஊழியர்கள் கூறுகையில்: எங்களுக்குரூ.18,500சம்பளம் எனகூறினார்கள்.ஆனால் தற்போது ரூ1,500 வரை மூன்று மாதங்களாக பிடித்தம் செய்கிறார்கள். இது குறித்து கேட்டால் மிரட்டுகிறார்கள். 8 மணி நேரம் வேலை என்பதை 9 மணி நேரமாக்கி உள்ளனர். தூய்மை பணி என சேர்க்கப்பட்டவர்களுக்கு மாற்று பணி கொடுக்கிறார்கள். இவ்வாறு பல்வேறு குளறுபடிகள் உள்ளன.

சமீபத்தில் வெளியில் கூற முடியாத ஒரு செயலில் ஈடுபட்ட நபரை மீண்டும்முக்கியபொறுப்பில் நியமித்து ஊழியர்களைபழி வாங்க நினைக்கிறார்கள். எங்களுக்கு பயமாக உள்ளது. என கூறினார்கள்.

இந்த போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. இதனால் நோயால் பாதிக்கப்பட்டவர்களை ஒரு வார்டில் இருந்து மற்றொரு வார்டிற்கு நோயாளிகளை கொண்டு செல்வது தூய்மை பணியாளர்கள் ஆகும். பணி நிறுத்தத்தால் நோயாளிகளுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது.

# பெருந்துறையில் விசிக தலைவர் திருமாவளவனின் 64வது பிறந்தநாள் விழா

## இலவச வீட்டுமனைப் பட்டா, குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு கோரி தீர்மானங்கள்



ஈரோடு ஆகஸ்ட் 31

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரிய வீரசங்கிலி பஞ்சாயத்து கிரே நகரில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவனின் 64வது பிறந்தநாள் விழா விசிக மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் தலைமையில், இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்டத் துணைச் செயலாளர் விவேக் (என்ற) ஜெரோம் மற்றும் ஒன்றியச் செயலாளர்சரண்குமார் ஆகியோர் முன்னிலையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. முன்னதாக நிகழ்விடத்திற்கு வருகை தந்த மாவட்டச்செயலாளர் வி. விஜயபாலனுக்கு கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து கட்சி கொடியேற்றி, கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ந்தனர்.

இவ்விழாவில் பெருந்துறை வடக்கு ஒன்றியச் செயலாளர் தம்பி குமார், சென்னிமலை ஒன்றிய துணைச்செயலாளர் ஜெபராஜ், சென்னிமலை நகரச் செயலாளர் விஜயா, பேரூர் செயலாளர் லதா மணி, பேரூர் துணைச் செயலாளர் சின்னசாமி, பேரூர் பொருளாளர் சேகர், ஆமோஸ், சாமுவேல், மூத்த பொறுப்பாளர் மணி, ரவிக்குமார் உள்ளிட்டப் பொறுப்பாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது, பெருந்துறை சட்டமன்றத் தொகுதி முழுவதும் தலைவரின் பிறந்தநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது எனவும், கிரே நகர் பகுதியில் நீண்டகாலமாக இலவச வீட்டுமனைப் பட்டா இன்றி தவிக்கும் மக்களுக்கு உடனடியாக பட்டா வழங்க அரசிடம் மனு அளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், கடந்த 10 நாட்களாகக் குடிநீர் பற்றாக்குறையால் அவதிப்பட்டு வரும் கிரே நகர் மக்களுக்குச் சீரான குடிநீர் வழங்கக் கோரி மக்கள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், தொகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் கட்சியின் கொள்கைகள் மற்றும் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தீவிரமாக முன்னெடுப்பது என்றும் ஒருமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தஞ்சாவூர் மாநகராட்சியில் டெங்கு பரப்பும் கொசு புழுக்கள் கண்டறி யப்பட்டால் வீட்டின் உரிமையாளரு க்கு அபராதம்

## ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரி எச்சரிக்கை



தஞ்சாவூர் ஆகஸ்ட் 31

தஞ்சாவூர் மாநகராட்சி பகுதியில் நடக்கும் கள ஆய்வில் டெங்கு பரப்பும் கொசு புழுக்களை கண்டறி யப்பட்டால் வீட்டின் உரிமையாளரு க்கு அபராதம் விதிக்கப்படும் என்று ஆணையர் தீபனா விஸ்வேஸ்வரி எச்சரிக்கை விடுத்துள்ளார்இ

துகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பது:

தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட 51 வது வார்டில் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களில் மூடி போடாமல் ட்ரம்புகளிலும், கலங்களிலும் ,தண்ணீரை தேக்கி வைப்பது, பழைய டயர்கள், உரல்க ள் ,உடைந்த பிளாஸ்டிக் சாமான்கள் கொட்டாங்குச்சிகளில் மழைநீர் தேங்கி நிற்பதால் அவற்றில் முட்டையிட்டு உருவாகும் கொசுக் கள் டெங்குகாய்ச்சலைபரப்புகின்றன

எனவே வீடுகளில் சுற்றுப்புறத் தைதுாய்மையாக பராமரிப்பதுடன் டெங்கு கொசுவை பரப்பும் ஏ டி எஸ் கொசு புழுக்கள் உற்பத்தியாகாமல் கட்டிடத்தில் அருகாமலேயே தேங்காய் ஓடுதல், உரல்கள், உடைந்த பிளாஸ்டிக் சாமான்கள் உட்பட உபயோகமற்ற பொருள்கள் அகற்றிட வேண்டும் ,செடி வளர்க்கும் தொட்டிகளில் நீர் தேங்காமல் பராமரித்திட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது

மேலும் நன்னீரில் வளரும் இந்த கொசுக்கள் பகல் நேரங்களில் மட்டுமே கடிக்கும். வீடுகளில் உட்புறங்க ளில் உள்ள பிரிட்ஜ் ட்ரெயில், உள்ள தண்ணீரில் ஏடிஎஸ் கொசு முட்டை யிட்டு கொசு உற்பத்தியாகும் வாய்ப்பு உள்ளதால், அதனை அடிக்கடி மாற்றி சுத்தமாக பராமரிக்க வேண்டும் .வீட்டு சமையல் மட்டும் குடிநீருக்காக பிடித்து வைக்கப்படும் தண்ணீரில் பாத்திரங்களை மூடி வைத்து பராமரிக்க வேண்டும் .வீடுகளில் வளர்க்கப்படும் மணி பிளான்ட் செடிகளில் தண்ணீர் ஊற்றி வளர்ப்பதால், அந்த தண்ணீரிலும் கொசுக்கள் உற்பத்தியாகும் வாய்ப்பு உள்ளது .ஏர்கூலரில் தேங்கும் தண்ணீரிலும் கொசுக்கள் உற்பத்தியாகும் என்பதால் ஏர்கூலர் இருக்கும் அருகில் கொசு முட்டைகள் இருக்க வாய்ப்புள்ளது. மழைக் காலங்களில் ஏர்கூலரை அடிக்கடி துடைத்து தண்ணீரை மாற்ற வேண்டும்

வீட்டைச் சுற்றிலும் சுத்தமாக பராமரிப்பதுடன் கட்டிடத்தில் மேல் தளங்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் மழைநீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கள ஆய்வின்போது டெங்கு பரப்பும் கொசு புழுக்கள் கண்டறியப்பட்டால் அந்த வீட்டின் உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்படும் இவ்வாறு அந்த செய்தி குறிப் பில் கூறப்பட்டுள்ளது.

# தருமபுரியில் அதிமுகவில் இணைந்த 3,800 பேர்; எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் மாற்றுக்கட்சியினர் இணைப்பு விழா



தருமபுரி ஆகஸ்ட் 31

தருமபுரி வன்னியர் திருமண மண்டபத்தில், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த சுமார் 3,800 பேர் அதிமுகவில் இணையும் பிரம்மாண்ட நிகழ்ச்சி நடைபெற்றது. அதிமுக கழக துணைப் பொருளாளர் டி.கே. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த இணைப்பு விழாவில், கழக துணைப் பொதுச்செயலாளர் கே.பி. முனுசாமி, தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் டி.ஆர். அன்பழகன், கிழக்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் அசோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். அப்போது அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் பல்வேறு மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த சுமார் 3,800 பேர் அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

புதிதாக கட்சியில் இணைந்தவர்களுக்கு அதிமுக கட்சி துண்டுகளை அணிவித்து வாழ்த்து தெரிவித்த எடப்பாடி பழனிசாமி, அவர்களை வரவேற்றார். இதனால் விழா நடைபெற்ற மண்டபத்தில் அதிமுக தொண்டர்கள் மற்றும் புதிதாக இணைந்தவர்களின் உற்சாகம் அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய எடப்பாடி பழனிசாமி, அதிமுக எப்போதும் பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்ட கட்சியாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அதிமுக ஆட்சிக் காலத்தில் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு இரண்டு முறை விவசாயிகளுக்கு சுமார் 18 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார். மேலும், கொரோனா பெருந்தொற்று காலத்தில் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வர முடியாத சூழ்நிலையில், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார். கடும் நிதி பற்றாக்குறை இருந்தபோதிலும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தி அதிமுக ஆட்சி நல்லாட்சியை வழங்கியதாகவும் அவர் கூறினார். தற்போதைய அரசுக்கு எதிராக விமர்சனம் தொடர்ந்து தற்போதைய தமிழக அரசை விமர்சித்த எடப்பாடி பழனிசாமி, தற்போதைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்று 120 நாட்களிலேயே 28 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளது .ஏற்கனவே தமிழகம் 10 லட்சம் கோடி கடன் சுமையில் உள்ளது. இதே நிலை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் ஆட்சி நடைபெற்றால், மேலும் 10 லட்சம் கோடி ரூபாய் வரை கடன் வாங்கும் நிலை ஏற்படும் என்று அவர் தெரிவித்தார்.

அரசு வாங்கும் கடனுக்கான சுமையை இறுதியில் பொதுமக்களே ஏற்க வேண்டிய நிலை உருவாகும் எனவும் எடப்பாடி பழனிசாமி கூறினார். மேலும், தற்போதைய ஆட்சி நீண்ட நாட்கள் நிலைக்காது என்றும், மக்கள் நலனை முன்னிறுத்தி அதிமுக தொடர்ந்து வலுவாக செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார். நிர்வாகிகள் – தொண்டர்கள் பங்கேற்பு இந்த இணைப்பு விழாவில் அதிமுக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள் நிர்வாகிகள் மற்றும் ஏராளமான அதிமுக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் ஒரே நிகழ்ச்சியில் அதிமுகவில் இணைந்தது, தருமபுரி மாவட்ட அரசியல் வட்டாரத்தில் கவனம் பெற்றுள்ளது.

## கிருஷ்ணகிரி அரசு மருத்துமனையில்

# மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆய்வு



கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டார் இந்த ஆய்வின் போது அமைச்சர் வெளி நோயாளிகள் பிரிவு, எலும்பு முறிவு அறுவை சிகிச்சை பிரிவு, இரத்த சுத்திகரிப்பு பிரிவு மற்றும் கழிவறை பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மருத்துவ கல்லூரி மருத்துவமனை பகுதிக்கு பேருந்து வசதியினை ஏற்படுத்துவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அறிவுறுத்தினார். மேலும் மருத்துவமனையில் உள்ள கழிவறை பகுதிகளை தூய்மையாக பராமரிக்கவும், இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை கழிவறை பகுதிகளை சுத்தம் செய்ய வேண்டும் எனவும் ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தினார். மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் பராமரிப்பு பணிகளை பொதுப்பணித்துறை அலுவலர்கள் அவ்வப்போது நேரில் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மருத்துவமனை கட்டிடத்தில் முறையான பராமரிப்பு பணிகளை மேற்கொண்டால்தான் மருத்துவமனை வளாகம் தூய்மையாகவும், பொதுமக்கள் பயன்படக்கூடிய வகையிலும் இருக்கும் என தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அமைச்சர் மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் மருத்துவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனையின் போது மாண்புமிகு அமைச்சர் தெரிவித்ததாவது, மக்கள் மிகப்பெரிய எதிர்பார்ப்போடு இந்த அரசுக்கு வாய்ப்பினை வழங்கியுள்ளார்கள் முதலமைச்சர் மக்களுக்கு தேவையான சிசிச்சைகளை தரமான முறையில் வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார். மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றுவதில் மருத்துவ அலுவலர்களின் பங்கு முக்கியமானது. அரசின் நோக்கத்தை அறிந்து மக்களின் தேவைக்கேற்ப மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க வேண்டும். மருத்துவமனைய நம்முடைய சொந்த வளாகம் என்ற எண்ணமும், வருகின்ற மக்கள் அனைவருக்கும் நாம் நல்ல சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற எண்ணமும் ஒவ்வொரு மருத்துவருக்கும் இருக்க வேண்டும். இம்மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தை மேலும் மேம்படுத்துவது குறித்து அமைச்சர் மருத்துவ அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். மருத்துவமனையில். சிடி. ஸ்கேன் மற்றும் MRI. ஸ்கேன் செயல்பாடுகள் மற்றும் மருத்துவ பயனாளிகள் விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியர் கல்லூரி மற்றும் விடுதி அமைப்பது குறித்து மருத்துவர்களின் கோரிக்கை குறித்து முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக அமைச்சர். டாக்டர். கோ. க. அருண் ராஜ் தெரிவித்தார்.

# சபரிமலையில் நடப்பது போல் ரெகுநாதபுரம் ஸ்ரீ வல்லபை ஐயப்பன் கோயிலில் குழந்தைக்கு அன்னப்ராசனம் வழங்கும் நிகழ்ச்சி

ராமநாதபுரம், ஆக.31

ராமநாதபுரம் ஸ்ரீவல்லபை ஐயப்பன் கோயிலில் சபரிமலையில் நடப்பது போல் முதன் முறையாக குழந்தைக்கு அன்னப்ராசனம் எனும் உணவு ஊட்டும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.



சபரிமலை ஐயப்பன் கோயிலில் குழந்தைகளுக்கு முதன் முதலில் சோறு ஊட்டும் நிகழ்ச்சி "சோறூணு" அல்லது "அன்னப்ராசனம்" எனும் உணவு ஊட்டும் நிகழ்ச்சி நடந்து வருகிறது. கேரளா மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த எண்ணற்ற பக்தர்கள் தங்களின் குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்கியமும், ஆயுளும் கிடைக்க வேண்டி இந்த வழிபாட்டை ஐயப்பனின் சன்னதிக்கு முன்பாக நடத்துகிறார்கள். கோயிலில் இருந்து வழங்கப்படும் பிரசாத சோறு அல்லது பாயாசம், வாழைப்பழம் ஆகியவற்றை ஒரு வாழையிலையில் வைப்பார்கள். பாரம்பரிய வழக்கப்படி, குழந்தையின் தந்தை அல்லது தாய்மாமன் குழந்தையைத் தன் மடியில் அமர வைத்து, ஐயப்பனை வேண்டிக்கொண்டு முதல் உணவை ஊட்டுவார். இந்த வழிமுறை தற்போது தமிழகத்தில் ராமநாதபுரம் மாவட்டம் ரெகுநாதபுரம் ஸ்ரீ வல்லபை ஐயப்பன் கோயிலில் முதன் முறையாக இரட்டைக் குழந்தைக்கு அன்னப்ராசனம் வழங்கும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது. ஓஎன்ஜிசி நிறுவனத்தில் பொறியாளராக பணியாற்றும் செந்தில்குமார் குடும்பத்துடன் சென்னையில் வசித்து வருகிறார். இவர் தனது இரட்டைக் குழந்தைகளுக்கு முதன் முதலில் உணவு ஊட்டும் நிகழ்ச்சியை ராமநாதபுரம் மாவட்டம் ரெகுநாதபுரம் ஶ்ரீ வல்லபை ஐயப்பன் கோயிலில் நடத்த நேர்த்திக்கடன் செய்து குடும்பத்துடன் வந்திருந்தார். நேற்று காலையில் சபரிமலையில் நடக்கும் நிகழ்ச்சி போல் பூஜை முடிந்தபின் கொடிமரத்தின் அருகே அன்னப்ராசனம் எனும் உணவு ஊட்டும் நிகழ்ச்சியை கோயிலின் தலைமை குருசாமி மோகன் தலைமையில் இரட்டை குழந்தைகளான பூர்ணா மற்றும் புஷ்கலா ஆகியோர் அவர்களது தாத்தா பாட்டி மடியில் அமர வைத்து வல்லபை ஐயப்பனை வேண்டிக் கொண்டு தலைமை குருசாமி மோகன் கோவிலில் பிரசாத சோறு பாயாசம் மற்றும் வாழைப்பழம் ஆகியவற்றை குழந்தைக்கு வழங்கி சோறு ஊட்ட வைத்தனர். முதன் முதலில் இக்கோயிலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை காண பக்தர்கள் பலரும் திரளாக திரண்டு வந்து கண்டு குழந்தைகளுக்கு ஆசீர்வாதம் செய்தனர்.

# இரணியலில் தொடர் கஞ்சா தடுப்பு சோதனையில் 1 கிலோ கஞ்சா பறிமுதல்;2 பேர் கைது

இரணியல், ஆக.31

கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப்பொருட்கள் முற்றிலும் ஒழிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தலைமையில் காவல்துறையினர் கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் அதன் தொடர்ச்சியாக மதுவிலக்குப் பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் ராஜா மேற்பார்வையில் மற்றும் ஆய்வாளர் தமிழரசன் தலைமையில் காவல்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். சோதனையில் இரணியல் வள்ளியாற்றுப் பாலம் அருகே கஞ்சா விற்பனை நடப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடுத்து அங்கு நடத்திய சோதனையில், பாறசாலை பகுதியை சேர்ந்த ஜெயசேகர் என்பவரின் மகன் ஜெகீஷ் (25), நெய்யாற்றிங்கரா காரோடு பகுதியை சேர்ந்அ பைஜு (46) ஆகியோரை கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து போலீசார் அரசால் தடை செய்யப்பட்ட 1 கிலோ 150 கிராம் கஞ்சா மற்றும் கஞ்சா விற்பனைக்காக பயன்படுத்திய ஆட்டோ ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் தக்கலை மதுவிலக்கு பிரிவு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்த



னர்கன்னியாகுமரி மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுபவர்கள் மீது இதுபோன்ற அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் துறை கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# 14 சிறப்பு ரயில் சேவை நீட்டிப்பு: தெற்கு ரயில்வே அறிவிப்பு



சென்னை: சென்னையில் இருந்து போடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி செல்லும் ரயில்கள் உட்பட 14 சிறப்பு ரயில்களின் சேவைகள் நீட்டிக்கப்பட்டுள்ளன.

அதன் விவரம்: தாம்பரம்போடி சிறப்பு ரயில் (06059) செப்.12ல் இருந்து செப்.26 வரை 3 சேவைகளும், மறுமார்க்கத்தில் போடி தாம்பரம் சிறப்பு ரயில் (06060) செப்.13ல் இருந்து செப்.27 வரை 3 சேவைகளும் நீட்டிக்கப்பட்டுள்ளன. சென்னை எழும்பூர் கன்னியாகுமரி சிறப்பு ரயில் (06045) செப்.4ல் இருந்து செப்.25 வரை 4 சேவைகளும், மறுமார்க்கத்தில் கன்னியாகுமரி எழும்பூர் சிறப்பு ரயில் (06046) செப்.6ல் இருந்து செப்.27 வரை 4 சேவைகளும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

போத்தனூர்சென்னை சென்ட்ரல் சிறப்பு ரயிலின் (06028) 12 சேவைகளும், மறுமார்க்கத்தில் (06027) 12 சேவைகளும் செப்.4ல் இருந்து செப்.27 வரை நீட்டிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி தாம்பரம் சிறப்பு ரயில் (06070) செப்.3ல் இருந்து செப்.24 வரை 4 சேவைகளும், மறுமார்க்கத்தில் தாம்பரம்திருநெல்வேலி சிறப்பு ரயில் (06069) செப்.4ல் இருந்து செப்.25 வரை 4 சேவைகளும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் 252 கால்நடை சுகாதார முகாம்கள் 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் நடத்த ஏற்பாடு

தஞ்சாவூர் ஆகஸ்ட் 31

தஞ்சாவூர் மாவட்டத்தில் 252 கால்நடை சுகாதார முகங்கள் நடத்தப்பட உள்ளது .மேலும் 14 ஒன்றியங்களில் இந்த முகாம்கள் நடத்தப்படுகிறது

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதி விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

கால்நடை வளர்ப்போருக்குகால்நடைவளர்ப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வும், கால்நடைகளுக்கு நோய் தடுப்பு மற்றும் நோய் தீர்க்கும் சுகாதார வசதிகளை வழங்கவும், 2026 27 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட உள்ளது

இதன்படி தமிழ்நாட்டில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 7.63 கோடி செலவில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்களை நடத்துவதற்கு அரசு உத்தரவிட்டுள்ளது .தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா18 முகாம் கள் வீதம் மொத்தம் 252 சிறப்பு கால்நடை முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

அடுத்த மாதம் செப்டம்பர் முதல் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மாதத்திற்கு 3 முகாம்கள் வீதம், இந்த முகாம்கள் நடைபெற உள்ளது. இந்த முகாம்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், மடிவிக்க நோய் மேலாண்மை, உடற்புழு நீக்கம், பல்வேறு நோய்களுக்கு எதிராக தடுப்பூசி செலுத்துதல் ,

ஆண்மை நீக்கம், செயற்கை கருவூட்டல் மலடு நீக்க சிகிச்சை, சினை பரிசோத னை , உள்பட பல்வேறு கால்நடை மருத்துவ பணிகள் மேற்கொள்ளப் பட உள்ளது.

மேலும் சிறு அறுவை சிகிச்சை உள்பட சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் கால்நடைகளின் உடல்நலத்தை பாதுகாப்பதுடன், கால்நடை வளர்ப்பு போருக்கு நோய் தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் .தஞ்சாவூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைபெற உள்ள முகாம்களில் நாள் மட்டும் இடம் குறித்து விவரங் களை அந்தந்த பகுதி கால்நடை உதவி மருத்துவர்கள் அறிவிப்பார் கள்

எனவே கால்நடை வளர்ப்பு இந்த அறிய வாய்ப்பை பயன்படுத்தி, தங்களது கால்நடைகளை முகாம்களுக்கு அழைத்துச் சென்று தேவையான நடவடிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற் கொண்டு, கால்நடைகளின் நலனை பேணிக்காப்பது காத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.